Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 1, No.2, 2020, (1-11)

# தடம் பிறழ்ந்த தேர்வுருக்கள்: பாட நூல்களிலுள்ள தேர்வுருக்களின் பகுப்பாய்வு

## Derailed Test Items: An Analysis of Test Items in the textbooks

P.Ratnasabapathy

Counsellor, Thamizhaga Institute of Educational Research & Advancement, Chennai

E-mail: prsabapathy@gmail.com

**DOI:** https://doi.org/10.37134/jov.vol1.2.1.2020

Received: 21 July 2020; Accepted: 15 August 2020; Published: 18 August 2020

**Cite this article (APA):** Ratnasabapathy, P. (2020). தடம் பிறழ்ந்த தேர்வுருக்கள்: பாட நூல்களிலுள்ள தேர்வுருக்களின் பகுப்பாய்வு. *Journal of Valartamil*, *1*(2), 1-12. https://doi.org/10.37134/jov.vol1.2.1.2020

**ஆய்வுச் சாரம்:** தமிழ்நாடு இடைநிலைக் கல்வியில் வகுப்பு 3 முதல் 10 வரை பின்பற்றப்படுகின்ற தமிழ்ப்பாட நூல்களில் உள்ள தேர்வுருக்கள் *(Test items)* பற்றிய கருத்துரையாகவும் பரிந்துரையாகவும் 'தடம் பிறழ்ந்த தேர்வுருக்கள் : தேர்வுருக்களின் பகுப்பாய்வு' என்னும் இந்த ஆய்வு அமைகிறது. இவ்வாய்வு சொற்களின் புணர்ச்சி தொடர்பாகப் பாடநூல்களில் தரப்பட்டுள்ள தேர்வுருக்களை கருதுகிறது. இவ்வாய்வு, 'சேர்த்து எழுதுதல்', 'பிரித்து எழுதுதல்' ஆகிய செயல்பாடுகளுக்காகப் பாடநூல்களில் வழங்கப்பட்டுள்ள தேர்வுருக்கள் புணர்ச்சி விதிகளைக் கற்பிப்பதற்கு உரியனவா?, அவ்தேர்வுருக்களின் கற்றல் நோக்கங்கள் யாவை? அத்தேர்வுருக்கள் முறையாக வடிவமைக்கப்பட்டு உள்ளனவா? ஆகிய மூன்று வினாக்களுக்கு விடை காண முயலுகிறது. மரபிலக்ண நூலாகிய நன்னூலினை அடிப்படையாகக் கொண்டு 'சேர்த்து எழுதுதல்', 'பிரித்து எழுதுதல்' ஆகிய சொல்லாட்சிகள் முறையற்றவை என இவ்வாய்வு நிறுவுகிறது. மேலும் அச்செயல்பாடுகள் மொழித்திறன் வளர்ச்சிக்கு உரியனவா என்பதையும் ஆராய்கிறது. நிறைவாக, இலக்கிய வரிகளை எடுத்தாண்டு இச்சசெயல்பாடுகளை வடிவமைக்க இவ்வாய்வு பரிந்துரைக்கிறது.

**கருச்சொற்கள்:** புணர்ச்சி, எண்ணமாற்றி, மொழித் திறன், கற்றல் நோக்கம், தெரிவுகள், தேர்வுருக்கள்.

***Abstract:*** *This Paper entitled 'Derailed Test Items: An Analysis of Test Items' deals about the test items provided in Tamil textbooks (Standards III to X) followed in Tami Nadu schools at Secondary level. Test items related to coalescence (In Tamil it is termed as Punarssi) of words are only addressed. It tries to answer three questions related to teaching of Tamil. They are 1) Whether the test items are developing language skill? 2) What are the learning objectives of the test items related to coalescence? and 3) Whether the items are properly designed? Citing reference from traditional Tamil grammar work Nanool the unsuitability of terminologies used in the test items of the textbooks is pointed out. Further this Paper examines the aptness of the above said test items in developing the language skill of the learner suggesting suitable test items in MCQ format. Finally, it recommends to adopt literature as corpus for generating test items to develop fluent reading of poetical works.*

***Keyword:*** *Coalescence of words, Distractor, Language skill, Learning objectives, Options, Test items.*

## முன்னுரை

தமிழ்நாடு அரசுப் பாடத்திட்டத்திற்கிணங்கத் தயாரிக்கப்பட்டுக் கடந்த 2018 ஆண்டு முதல் பயன்பாட்டில் உள்ள மூன்று முதல் பத்தாம் வகுப்பு வரையிலான தமிழ்ப் பாடநூல்களில் "சேர்த்து எழுதுதல்" , "பிரித்து எழுதுதல்" எனத் தேர்வுருக்கள் (test item) (Balakumar, 2016). அமைக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரை அவற்றைக் கற்றல் விளைவு நோக்கில் ஆராய்கிறது.

## ஆய்வுச் சிக்கல்

1. சேர்த்து எழுதுதல், பிரித்து எழுதுதல் தேர்வுருக்கள் மொழித்திறன் வளர்ச்சிக்கு உரியதாகின்றனவா?
2. அத் தேர்வுருக்களின் கற்றல் நோக்கங்கள் யாவை?
3. அவை முறைப்பட பாட நூல்களில் அமைக்கப்பட்டுள்ளனவா?

ஆகிய வினாக்களை ஆய்வுச் சிக்கல்களாக முன்னிறுத்தி இக்கட்டுரை படைக்கப்படுகிறது. இவற்றுள் மூன்றாவதாகக் குறிக்கப்பட்ட வினா முதலில் நோக்கப்படுகிறது. தொடர்ந்து பிற நோக்கப்படுகின்றன.

## ஆய்வின் நோக்கம்

தாய்மொழியாக அல்லது முதல் மொழியாகத் தமிழ் கற்கும் குழந்தைகள் இயல்பாகத் தங்கு தடையின்றித் தமிழைப் பேசும் வல்லமை பெற்றிருப்பார்கள். அதன் காரணமாகப் படிக்கும் திறமை பெற்றிருக்கலாம் எனக் கருதிப் பல பயிற்சிகள் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை தவறானவை என்று நிறுவி, அவற்றிற்கு மாற்றாக எவற்றைத் தரலாம் என்பதை நோக்கமாகக் கொள்கிறது.

## ஆய்வு முறை

இக்கட்டுரை விளக்கமுறையைப் பின்பற்றித் தவறாக வடிவமைக்கப்பட்டள்ள பயிற்சிகளை எடுத்துக்காட்டுகிறது. அவற்றை முறைப்படுத்துதற்கான வழிமுறைகளைத் தருகிறது.

**தேர்வுருக்களின் முறையற்ற அமைப்பு**

சேர்த்து எழுதுதல், பிரித்து எழுதுதல் என அமைக்கப்பட்ட தேர்வுருக்கள் மூன்று முதல் பத்தாம் வகுப்புவரையிலான எட்டு வகுப்புக்களிலும் தமிழ்ப் பாடநூல்களில் இடம் பெற்றுள்ளன *(Ratnasabapathy, 2018)*. எடுத்துக்காட்டாக,

***எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.*** *(4: Std X, 45)*

***(அ) எந் + தமிழ் +நா***

***(ஆ) எந்த + தமிழ் +நா***

***(இ) எம் + தமிழ் + நா***

***(ஈ) எந்தம் +தமிழ் +நா***

***பிரித்தெழுதுக: கண்டெடுக்கப்பட்டுள்ளன*** *(4: IX, 84)*

***(அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன.***

***(ஆ) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன***

***(இ) கண்டெடுக்கப் + பட்டு + உள்ளன***

***(ஈ) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன***

***இருதிணை என்னும் சொல்லைப் பிரிந்தெழுதக் கிடைப்பது*** *. . . (4: Std.VIII,7)*

***(அ) இரண்டு +திணை***

***(ஆ) இரு + திணை***

***(இ) இருவர் + திணை***

***(ஈ) இருந்து + திணை***

***ஒப்புமை + இல்லாத என்பதனைச் :சேர்த்தெழுதக் கிடைப்பது*** *(4:Std VII, 7)*

***(அ) ஒப்புமைஇல்லாத***

***(ஆ) ஒப்பில்லாத***

***(இ) ஒப்புமையில்லாத***

***(ஈ) ஒப்புஇல்லாத***

***செந்தமிழ் என்பதைப் பிரித்தெழுதக் கிடைப்பது*** *(4: Std III, 2)*

***(அ) செம்மை + தமிழ்***

***(ஆ) செந் + தமிழ்***

***(இ) செ + தமிழ்***

*(ஈ) செம் + தமிழ்*

என்பன போன்ற போன்ற தேர்வுருக்கள் மேலே குறிப்பிட்ட வகுப்புக்களில் அமைந்துள்ளன.

தாய்மொழியாக அல்லது முதல் மொழியாகத் தமிழ் கற்கும் குழந்தைகள் இயல்பாகத் தங்கு தடையின்றித் தமிழைப் பேசும் வல்லமை பெற்றுப் படிக்கும் *(Reading)* திறனைப் பெற்றிருக்கவியலும் *(Nadaraja Pillai, 2017)*. என்பதன் அடிப்படையில் இப்பயிற்சிகள் மூன்றாம் வகுப்பில் தொடங்கப்பட்டிருக்கும் எனக் கருதப்படுகிறது. பிற ஏதுக்கள் எதுவும் அறியப்படவில்லை.

தாய்மொழியாகத் தமிழை இயல்பாகப் பேசுவோர் தம் மொழி உள்ளுணர்வுத் தூண்டலால் சொல்லோடு உருபுகளை இணைத்தும் தொகை நிலைத் தொடர்களில் உள்ள இரண்டு சொற்களை ஒரு சொல் போன்றே இணைத்துப் பேசுவர்; படிப்பர். பேச்சுத் தமிழ்ச் சாயல் காணப்படினும் இணைத்துப் பேசுவதில் பிறழ்ச்சிக் காணப்படாது. 'அம்மாவோடு வந்தேன்" என்று சொல்வார்களே தவிர , '**அம்மா ஓடு வந்தேன்**' என்று 'ஓடு' உருபைத் தனியே ஒலிப்பதில்லை. தங்கு தடையின்றி படிக்கத் தெரிந்தவர் 'உதவி செய்தான்' என்னும் தொடரில் உள்ள இரண்டு சொற்களைத் தனித்தனியேதான் ஒலிப்பர். " உதவிசெய்தான்' என இரு சொற்களையும் இணைத்து ஒலிப்பதில்லை. ஆனால் 'உதவித்தொகை' என இணைத்துப் பேசுவர்; இணைத்து எழுதவும் செய்வர். இவ்வாறு எழுதுதல் தொடர்பாகச் சில கருத்து வேற்றுமைகள் உள்ளன. அது தனி ஆய்வுக்கு உரியது.

இயல்பாக இணைத்தோ தனித் தனியாகவோ படிக்கவும் எழுதவும் பழகுகின்ற உள்ளுணர்வை ஏற்படுத்துவதே இத் தேர்வுருக்களின் நோக்கம் எனக் கருதப்படுகிறது. இந்த நோக்கத்தைக் கருத்திற் கொள்ளாது, புணர்ச்சி விதிகளைத் தொடக்க நிலையிலேயே கற்பிப்பதற்கு எனப் பாடநூல் ஆசிரியர்கள் கருதுவதாகவும் அப்பயிற்சிகளில் தரப்பட்டுள்ள தேர்வுருக்கள் காட்டுகின்றன. இவ்வாறு கருதியதால் பொருத்தமற்ற சொல்லாட்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன; பொருளற்ற தேர்வுருக் கூறுகளும் *(components of test item)* தரப்படுகின்றன.

### பொருத்தமற்ற சொல்லாட்சி

‘இரு சொற்களைச் சேர்த்து எழுதுதல்’ என்பது சொல்லுக்குச் சொல் இடம் விடாமல் எழுதுதலைக் குறிக்கும். இப்பொருண்மையில் *(concept)* அப்பயிற்சிகளில் அச்சொல் எடுத்தாளப்படுவதில்லை. ‘**புணர்த்தி எழுதல்**’ என்ற பொருண்மையினைக் கொண்டுள்ளது.

நன்னூலுக்கு முதன்முதல் காண்டிகை உரை தந்தவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் (1984). அவர் தாம் எழுதிய நன்னூல் காண்டிகை உரையின் ‘அப்பியாசம்’ என்னும் தலைப்பில் அமைந்த பின்னிணைப்பில் ‘புணர்த்தல்’, ‘புணர்ச்சி’ முதலிய சொல்லாட்சிகளையே பயன்படுத்துகிறார். அவர் தம் காண்டிகை உரையுள் ஆங்காங்கே ‘பரீக்ஷை வினாக்கள்’ தந்திருக்கும் வினாப் பகுதிகளில் ‘சேர்த்து எழுதுதல்’, ‘பிரித்து எழுதுதல்’ ஆகிய சொல்லாட்சிகள் இல்லை. (Damodaran, 1999*)*.

எடுத்துக்காட்டு:

மேல் வரும் தொடர் மொழிகளிலே குற்றியலுகரமும் முற்றியலுகரமும் கெட்டுப் புணர்ந்தமையும் கெடாது **புணர்ந்தமையும்** எடுத்துக்காட்டி விளக்குக. (1: ௩௪அ)

மேல்வரும் தொடர்களில் உள்ள ல, ள வீற்றுப் **புணர்ச்சியை** எடுத்துக்காட்டி விதியோடு விளக்குக. (1: ௩௫க)

பரீக்ஷை வினாக்கள்: மெய்யீற்றின் முன் உயிர் வரின் எவ்வாறு **புணரும்**? (1: **க**௩க) புணர்த்தி எழுதுதல் என்னும் சொல்லாட்சியை அறிமுகப்படுத்திய பின்னரே இத்தகைய தேர்வுருக்களை வழங்குதல் முறையாகும் *(Nadaraja Pillai, 2019)*. மூன்றாம் வகுப்பு நிலையில் இந்தச் சொல் அறிமுகப்படுத்தப் படவில்லையாயின் எந்த வகுப்பில் அறிமுகப்படுத்த இயலுமோ அந்த வகுப்பில் இப்பயிற்சிகளை அமைப்பதால் தமிழ் கற்றலில் எவ்விதக் குறையாடும் நேர்ந்துவிடாது.

## பொருளற்ற தேர்வுரு

‘சேர்த்து எழுதுதல்’ என்பதை ‘புணர்த்தி எழுதுதல்’ எனக் கொண்டாலும், இது சொற்களைப் புணர்ச்சி விதிகளுக்கு எற்ப ஒருங்கிணைப்பதைக் குறிக்கும். ஒரு சொல்லைப் பிரித்து

எழுதுவதாகாது. கூட்டுச் சொற்கள், தொடர்களாகக் கருதப்பட்டுப் பிரித்து எழுதுதற்கான தேர்வுருக்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவையன்ன தேர்வுருக்கள் மாணவர்களின் எழுதுதல் திறனை எதிர்நாட்களில் இடர்ப்படுத்தும்.

பாடநூல்களில் பிரித்து எழுதுவதற்கெனத் தரப்பட்டுள்ள கீழ்க் குறித்த பலவுள் தெரிவு தேர்வுருக்களை நோக்குக.

| பார்வை | கொடுக்கப்பட்டுள்ள சொல் | தரப்பட்டுள்ள தெரிவுகள் |
|---|---|---|
| **வகுப்பு 5, பக்.29** | **வைத்திருந்தனர்** | **அ) வைத்து +யிருந்தனர் ஆ) வைத்+ இருந்தனர்**<br>**இ) வைத்து + இருந்தனர் ஈ) வைத் + திருந்தனர்** |
| **வகுப்பு 7, பக். 102** | **துயின்றியிருந்தார்** | **அ) துயின்று + இருந்தார் ஆ) துயில் + இருந்தார்**<br>**இ) துயின்றி + இருந்தார் ஈ) துயின் + இருந்தார்** |
| **வகுப்பு 8, பக். 126** | **பெற்றெடுத்தோம்** | **அ) பெறு + எடுத்தோம் ஆ) பேறு + எடுத்தோம்**<br>**இ) பெற்ற + எடுத்தோம் ஈ) பெற்று + எடுத்தோம்** |

மேற்குறித்த தேர்வுருக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் எல்லாம் கூட்டுவினைகள். தொடர்களல்ல. சொற்களை அவற்றின் கூறுகளாகத் தனித்தனியே காட்டுவது உறுப்பிலக்கணம். புணர்ச்சி சார்ந்த தொடரிலக்கணமன்று *(Ratnasabapathy, 2003)*. கொடுக்கப்பட்டுள்ள தெரிவுகள் அனைத்தும் முதன்மைப் பகுதியாக *(Stem)* உள்ள சொற்களின் முறையான பிரிப்பன்று. ‘வைத்திரு’, ‘துயின்றிரு’, ‘பெற்றெடு’ என்பனவே அவற்றின் பகுதிகள். எனவே, மேற்காட்டியவற்றில் தரப்பட்டுள்ள சொற்களும் அவற்றிற்கான தெரிவுளும் பொருளற்றவை: பொருத்தமில்லாதவை.

## தேர்வுருக்களின் கற்றல் நோக்கங்கள்

சேர்த்து எழுதுதல், பிரிந்து எழுதுதல் தேர்வுருக்கள் நன்னூல் போன்ற இலக்கண நூல்களில் காணப்படும் ‘புணர்ச்சி விதிகள்’ தொடர்பானவையாயினும்,பாடத்திட்டத்திற்கிணங்க புணர்ச்சி இலக்கணம் கற்பிப்பதற்கு முன்னரே இத் தேர்வுருக்கள் பாடநூல்களில் அமைக்கப்ட்டுள்ளன.

பாடத்திட்டத்திற்கிணங்கவும் பாடநூல்களின் பனுவல் அடிப்படையிலும் புணர்ச்சி என்னும் இலக்கணப் பகுதி எட்டாம் வகுப்பில்தான் தொடங்கப்படுகிறது (4: Std.VII,139-140) அப்பகுதியிலும் இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி தொடர்பான கற்றல் பனுவல்கள் (texts)

உள்ளன. ஒன்பதாம் வகுப்பில் உடம்படுமெய், குற்றியலுகரப் புணர்ச்சி, மெய்மயக்கம் ஆகிய பகுதிகளே உள்ளன. இவை தொடர்பான தேர்வுருக்கள் ஒன்பதாம் வகுப்பில் மட்டுமல்லாது அதற்கு முந்தைய வகுப்புக்களிலும் இடம்பெறுகின்றன. எனவே, சேர்த்து எழுதுதல், பிரிந்து எழுதுதல் ஆகியன சார்ந்த தேர்வுருக்கள் புணர்ச்சி விதிகளைக் கற்பிக்கும் நோக்கமுடை யனவல்ல.

பாடத்திட்டத்திலும் இத்தேர்வுருக்களின் நோக்கங்கள் பற்றித் தனியே குறிப்பிடப்படவில்லை. கற்பிக்கும் ஆசிரியர்களே நோக்கங்களை வரையறுத்துக் கொள்ளவேண்டிய நிலையில் உள்ளனர் *(Renupadma, 2006).*

## மொழி உள்ளுணர்வைத் தூண்டுதல்

விதிவிலக்காய்க் காணப்படும் சில சொற்கள், தொடர்களைத் தவிர ஏனைய தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோரின் ஒலிப்பு இயல்புக்கு ஏற்ப புணர்த்தி ஒலிக்கும் பாங்கில் உள்ளன. ‘கல் எறிந்தான்’ என்பது ‘கல்லெறிந்தான்’ என இயல்பாகவே ஒலிக்கப்படும். இரண்டாம் மொழியாகக் கற்பவருக்கு இது வளர்ச்சி நிலையில் பொருத்தமாகக் காணலாம். ‘கலை ஆர்வம்’ என்னும் தொடரை ‘கலையார்வம்’ என்று இணைத்தே தாய்மொழியாளர்கள் ஒலிப்பர். எனவே, ‘இத்தகைய ஒலிப்பு இயல்பினை கற்பவர் பெற்று முறையாக ஒலித்தல்’ என்பதே இத்தகைய தேர்வுருக்களின் நோக்கமாகக் கொள்ளுதல் பொருந்தும். இது வாசிப்புப் பயிற்சியின் ஒரு படிநிலை (Thirumalai, 1998). இதனைப் புரியாதவாறு, இந்தத் தேர்வுருக்கு உரிய விடைகளை மாணவர்கள் பொருளுணராமல் குருட்டு மனப்பாடம் செய்யுமாறு கற்பிக்கப்படுகின்றனர்.

ஆறாம் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளில், இத்தகைய பயிற்சிகளை, இலக்கண விதிகளை, விதிவரு முறையில் கற்பிக்கப் பயன்படுத்தவியலும். ஆனால் தரப்படுகின்ற பலவுள் தெரிவின் முதன்மைப் பகுதியும் தெரிவுகளும் தற்போது உள்ளது போல இல்லாமல் மாறுபட அமைந்திருக்கவேண்டும்.

‘கால் + ஓய்ந்தது = காலோய்ந்தது’ இப் புணர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றம்…

அ) ‘ல்’ (நிலைமொழி ஈறு) ‘லோ’ ஆகியுள்ளது.

ஆ) “ஓ’ (வருமொழி முதல்) மறைந்துவிட்டது.

இ) ‘ஓ’ என்னும் உயிர் ‘லோ’ என உயிர்மெய்யாகியது.

ஈ) நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் இணைந்துள்ளது.

'உடன் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.' (நன்னூல் நூற்பா204) என்னும் நன்னூல் நூற்பாவினை விதிவருமுறையில் கற்பிப்பதற்கு மேலே காட்டிய தேர்வுரு பொருத்தமுடையதாக விளங்கும். இத்தகையன தொடக்க வகுப்புகளுக்குப் பொருந்தாது. ஆறாம் வகுப்பிற்கு மேற்பட்டவற்றில் இடம்பெறின் பயன் நல்கும்.

## சேர்த்து எழுதுதல், பிரிந்து எழுதுதல் தேர்வுருக்களும் மொழித் திறன் வளர்ச்சியும்

'சேர்த்து எழுதுதல்', 'பிரித்து எழுதுதல்' ஆகியனவற்றின் கற்றல்- கற்பித்தல் பாடத்திட்டத்தில் வரையறுக்கப்படாத நிலையில், மொழித் திறன் வளர்ச்சி நோக்கில் இப்பயிற்சிகளைக் கொள்ள இரு வகையான நோக்கங்களை வரையறுக்க இயலும் *(Veerappan, 2001).* ஒன்று மேலே காட்டப்பட்டவாறு வாசிப்புப் பயிற்சி சார்ந்த மொழி உள்ளுணர்வை மாணவர் பெறுதல். இந்நோக்கம் தொடக்க வகுப்புகளுக்குப் பொருத்தமாக அமையும். வகுப்பு 6 முதல் மேம்பட்ட வகுப்புக்களுக்குப் பின்னாளில் கற்கவிருக்கும் புணர்ச்சி விதிகளுக்கு உரிய முன்அறிவு பெறும் நோக்கம் பொருத்தமுடையதாக இருக்கும். ஆனால் வகுப்புத் தரத்திற்கு ஏற்ப சொற்களும் தொடர்களும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இவ்விரு நோக்க நிறைவேற்றத்திற்கும் உரிய தேர்வுருக்களின் அமைப்பில் மாற்றம் தேவை. இத்தேவையினை இப்போதைய தேர்வு உருக்களின்; அமைப்பு காட்டுகிறது.

**ஒலிப்பு உள்ளுணர்வுத் தூண்டல்**. எடுத்துக்காட்டாக ஒரு தேர்வுரு:

**வேட்டை + ஆட இச்சொல்லைச் சேர்த்தெழுதக் கிடைப்பது**.

**அ) வேட்டையட**

**ஆ) வேட்டையாட**

**இ) வேட்டைஆடு**

**ஈ) வெட்டையாட**

இயல்பாகத் தமிழை வாசிக்கத் தெரிந்த எந்தக் குழந்தையும் தெரிவு (ஆ) வைத் தேர்ந்தெடுக்கும். அவ்வாறு தேர்ந்தெடுக்கவில்லையாயின் வாசிப்புத் திறன் பெறவில்லை என்பதுதான் பொருள். இது வாசிப்புத் திறன் பெற்றிருப்பதை அறிவதற்கான தேர்வுருவன்று. அதற்கு மேம்பட்ட நிலையில் அமையவேண்டிய வாசிப்பு மொழி உள்ளுணர்வுத் தூண்டல் பெறுதல் ஆகும்.

**ஒலித்துப் பார்த்து விடையைத் தேர்ந்தெடுக்கவும்**.

வேட்டை, ஆட - இந்த இரு சொற்களையும் இணைத்து

'வேட்டையாட' என்று ஒலிப்பது சரி / தவறு ________

படம், கதை இந்த இரு சொற்களை இணைத்துப்

படக்கதை என்று ஒலிப்பது சரியா, தவறா சரி / தவறு ________

இத்தகைய தேர்வுருக்கள் தமிழ் ஒலிப்பு உள்ளுணர்வை வளர்க்க வல்லன.

## தமிழ்ச் சொற்களின் புணர்ச்சி அமைப்பினை இனங்காணல்

தமிழ் மொழி அமைப்பில் புணர்ச்சி இலக்கணம் தனித்தன்மை வாய்ந்தது. புணர்ச்சி விதிகளை அறிந்துகொள்வதற்கான முன்னறிவினைப் பெறுவதற்கும் இப்பயிற்சிகள் வழிகாட்டும். ஆனால் அமைக்கப்படும் தேர்வுருக்கள் வினாப் பிறழ்வின்றி இருத்தல் வேண்டும். பாட நூல்களில் சேர்த்து எழுதுதல், பிரித்து எழுதுதல் தொடர்பான தேர்வுருக்கள் எதுவும் முறையாகத் தயாரிக்கப்படவில்லை. கற்றல் நோக்கங்களுக்கு ஏற்ப முதன்மைப் பகுதி இல்லாதிருத்தல், பொருத்த மற்ற தெரிவுகளைக் கொண்டிருத்தல் முதலிய குறைபாடுகள் காணப்படுகின்றன. புணர்ச்சி தொடர்பான பலவுள் தெரிவு தேர்வுருக்களை மாணவர் புரிந்துகொள்ள நிலைமொழி, வருமொழி, நிலைமொழி ஈறு, வருமொழி முதல், புணர்த்தி எழுதுதல், புணர்ப்பின்றி எழுதுதல் ஆகிய சொற்கள், தொடர்களின் பொருண்மையினை மாணவர்கள் புரிந்திருக்கவேண்டும். எனவே, ஆசிரியர்கள் இவற்றை உரியவாறு அறிமுகப்படுத்தியிருத்தல் வேண்டும். எடுத்துக் காட்டாக, உடம்படு மெய் தொடர்பான விதியை அறிவதற்குரிய முன்னறிவைப் பெறுவதற்குக் கீழ்க் குறித்த எந்தப் புணர்ச்சியில் நிலை மொழி, வருமொழிக்கிடையே 'ய்' தோன்றும்.

அ) கட்டை + எரிந்தது

ஆ) வந்தவர் + யார்

இ) யாரினும் + யாரினும்

ஈ) உலகம் + யாவையும்

என்னும் தேர்வுரு பொருத்தமானதாகும்.

"கட்டை + எரிந்தது = கட்டையெரிந்தது" இதனுள் புணர்ச்சிக்குப் பின் ஏற்பட்ட மாற்றம் …

அ) வருமொழியில் 'எ' மறைந்தது

ஆ) இரு சொற்களுக்கும் இடையில் 'ய்' தோன்றியது

இ) இரு சொற்களுக்கும் இடையில் 'யெ' தோன்றியது

ஈ) ‘எ’ என்னும் எழுத்து ‘யெ’ ஆகியது.

இவ்வாறாகவும் தேர்வுருக்களை அமைக்கலாம். அமைப்பின் பின்னாளில் கற்க விருக்கும் புணர்ச்சி விதிகளை மாணவர்களே கண்டறியும் ஆற்றலைப் பெருக்கவியலும் *(Sethupandiyan, 2018).* பாடநூல்களில் தரப்பட்டிருக்கும், ‘கோயிலப்பா’ என்னும் சொல்லைப் பிரிந்து எழுதக் கிடைப்பது.

(அ) கோ + அப்பா

(ஆ) கோயில் + லப்பர

(இ) கோயில்+ அப்பா

(ஈ) கோ + இல்லப்பா

போன்ற தேர்வுருக்கள் பொருத்தமற்றதும் பொருளற்றதுமான எண்ணமாற்றிகளைக் கொண்டுள்ளன. இவை போன்ற தேர்வுருக்கள் தவிர்க்கப்பட்டு மேலே காட்டியவாறான பிறழ்வற்ற தேர்வுருக்கள் வழங்கப்படவேண்டும்.

## பிரித்து எழுதும் செயல்பாடு கொண்ட தேர்வுருக்கள்

புணர்ப்பு நீக்கி எழுதும் திறனை வளர்க்க உதவுவது பிரித்து எழுதும் தேர்வுருக்கள். இவற்றை மூன்றாம் வகுப்பிலிருந்து அறிமுகப்படுத்துவதற்கு, அவ்வகுப்பினரின் மொழித்திறன் உகந்ததா என்பது ஆய்விற்குரியது. செய்யுட்களைத் தங்கு தடையின்றி வாசிக்கும் திறன் பெற்ற பின்னர், இலக்கியங்களிலுள்ள செய்யுள் அடிகளைக் கொடுத்து அவற்றிலுள்ள புணர்ப்புகளை நீக்கிப் படிக்கச் செய்வதான தேர்வுருக்கள் செய்யுட்களைப் படிக்கும் நோக்கத்தினை நிறைவேற்றும். இவை பலவுள் தெரிவுகளாக வழங்கப்படின் அவற்றின் முதன்மைப் பகுதி, செய்யுட் சீராகவோ அடியாகவோ அமைந்தால் செய்யுளை வாசிக்கும் திறன் வலுப்படும். பாடநூல்களில் இத் தேர்வுருக்களின் முதன்மைப் பகுதிகளில் பெரும்பாலவை ஆசிரியர்களால் ஆக்கப்படுவனவாக உள்ளன. இவை தவிர்க்கப்பட்டு எண்ணற்றதும் வளமிக்கதுமான தமிழ் இலக்கிய அடிகளைப் பலவுள்தெரிவின் முதன்மைப் பகுதியாகக் கொண்டு இலக்கியத் தரவுத் தொகுப்பு *(corpus)* முறையைப் பின்பற்றி மொழித் திறளையும் இலக்கியத் திறனையும் வளர்க்கவியலும்.

## முடிவுரை

தமிழ்நாடு அரசுக் கல்வித்துறையால் வெளியிடப்பட்டுப் பின்பற்றப்படுகின்ற தமிழ்ப் பாடநூற்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் தமிழ் கற்பிக்கப்படுகின்ற இந்திய மாநிலங்கள் பிறவற்றிலும் வெளிநாடுகளிலும் முன்னோடிப் பாடநூற்களாகக் கொள்ளப்படுகின்றன. எனவே, இவற்றுள் அடங்கிய கற்றல் பனுவல்களின் *(Texts)* கற்றல் நோக்கப் பொருத்தம் ஆராய்தற்குரியது. அப்பனுவல்களுள் ஒன்றான சேர்த்து எழுதுதல், பிரித்து எழுதுதல் ஆகிய செயல்பாடுகளுக்கான தேர்வுருக்களின் பொருத்தம் இக்கட்டுரையில் ஆராயப்பட்டது.

தேர்வுருக்களின் அமைப்பு, அவற்றின் கற்றல் நோக்கங்கள், அவை மொழித் திறன் வளர்ச்சிக்கு உதவும் பாங்கு ஆகியன இவ்வாய்வில் கருதப்பட்டன. தங்கு தடையின்றி வாசிக்கும் திறனை மேம்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட தேர்வுருக்கள், புணர்ச்சி விதிகளை அறிமுகப்படுத்தும் நோக்கினதாகும் எனக் கருதப்பட்டுள்ளன. பலவுள் தெரிவு அமைப்பில் அமைந்துள்ள தேர்வுருக்களின் முதன்மைப் பகுதிகளும் தெரிவுகளும் பொருத்தமற்றிருப்பதால் வாசிப்புத் திறன் வளர்க்கும் நோக்கம் நிறைவேறவில்லை. முதல் மொழி கற்றல் நிலையிலும் இரண்டாம் மொழி கற்றல் சூழலிலும் வாசிப்புத் திறனை மேம்படுத்த தேர்வுருக்களின் முதன்மைப் பகுதியும் தெரிவுகளும் பொருத்தமுற மாற்றி அமைக்கப்பட வேண்டும். பிரித்து எழுதும் செயல்பாட்டிற்கான தேர்வுருக்களைத் தயாரிக்கத் தமிழ் இலக்கியங்கள் கொண்டுள்ள செய்யுட்களைத் தரவுத் தொகுப்பாகக் *(Corpus)* கொள்ளவேண்டும். அப்போதுதான் அவற்றின் கற்றல் நோக்கம் நிறைவேறும்.

## REFERENCES

Arumuga Navalar, Yazhppanam Nallur. (1984). *Nannul kandikai urai*.Thanjavur: Tamil University
Balakumar, M. (2014). *mozhi theervidal kadduraikaL*. Mysuru: CIIL.
Balakumar, M. (2016).*mathippiidduk kalais sorkaL*. Mysuru: CIIL.
Damodaran, A. (1999). *nannuul muulamum viruththiyuraiyum*. Chennai: International